
# உபவாசம்

## 1



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்திகளிலிருந்து



...வெள்ளிக்கிழமைகள் உபவாசிக்கும் ஒரு நாளாக இருக்கிறது. நீண்ட காலமாக எனக்கு அவ்வாறு இருந்து வந்திருக்கிறது.

சகோ. பிரன்ஹாம்

செய்தி: உம்முடைய வார்த்தையின்படி, 51-0928, பத்தி எண் E-19

# உங்கள் வீடுகளில் உபவாசித்து ஜெபித்துக் கொண்டிருங்கள்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: ஐயன்மீர் , நாங்கள் இயேசுவைக் காண விரும்புகிறோம், 54-0328, பத்தி எண் E-1


*உங்கள் வீடுகளில் உபவாசித்து ஜெபித்துக் கொண்டிருங்கள்.*

*பெரிய எதிர்பார்ப்புகளோடு வாருங்கள்.*

*நீங்கள் எதையும் எதிர்பார்க்கவில்லையென்றால், நீங்கள் ஒன்றையும் பெற்றுக் கொள்ளப் போவதில்லை.*

*நீங்கள் எதிர்பார்ப்பது எப்படியோ, அப்படியே பெற்றுக் கொள்வீர்கள்.*

# நீங்கள் உபவாசிக்க நடத்தப்படும் வரை ஒருபோதும் உபவாசிக்க விரும்பாதீர்கள்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: ஏன்?, 61-0125, பத்தி எண் E-9

ஆகவே ஏறக்குறைய இரண்டு அல்லது மூன்று நாட்கள் உபவாசம் எடுத்தேன், அந்த நாள் பிற்பகலில் பிரசங்கம் செய்யப் போனேன். நல்லது, அவ்விதமாகத்தான் காணப்படுகிறது...

நீங்கள் உபவாசிக்க நடத்தப்படும் வரை ஒருபோதும் உபவாசிக்க விரும்பாதீர்கள்.

உங்களுக்குப் பசியெடுத்தால், அதுவே புசிக்கிற நேரமாகும்.

அதற்குப் பிறகு இயேசு பசியுள்ளவராக இருந்தார்.

இவர்களில் சிலர் கூறுகிறார்கள், இந்த ஜனங்கள் உபவாசித்து, ‘நான் நாற்பது நாள் உபவாசிக்கப் போகிறேன்’ என்று கூறுகிறார் கள். பொய்ப்பற்கள் எல்லாம் விழுந்து விடுகிறது, எடை குறைந்து விடுகிறது, மேலும்...

என்னே, நீங்கள் அதை நிறுத்துவது நல்லது.

அப்படிப்பட்ட காரியங்களில், அதைச் செய்ய தேவன் உங்களை வழிநடத்தும் வரை காத்திருங்கள்.

ஆவியினால் வழிநடத்தப்படுவீர்களாக.

ஆனால், நீங்கள் உபவாசிக்கும்போது, நீங்கள் பசியாயிருப்பதில்லை. இயேசு, அவர் உபவாசத்தில் இருந்த பிறகு, ‘அவர் பசியாயிருந்தார்’ என்று வேதம் கூறுகிறது



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 56-0121, உள்திரை, பத்தி எண் E-26

கிறிஸ்தவம் என்பது ஏதோவொன்றல்ல, தேவனை அடைவதற்காக நீங்கள் இரந்து, அழுது முறையிட்டு, உபவாசித்துப் பசியா யிருந்து இப்படிப்பட்ட பல காரியங்களை தேவன் செய்ய மாட்டார். நிச்சயமாக இல்லை. உபவாசம் இருப்பதை நான் கன வீனப்படுத்தவில்லை.

ஆனால், இங்கே கொஞ்ச காலத்திற்கு முன்பாக, உபவாசம் என்ற பொருளில் ஒரு மனிதன் புத்தகம் ஒன்று எழுதினார்.

என்னே, கூட்டத்திற்கு வருகிற ஸ்திரீகள், மனிதர்கள், அப்படிப்பட்ட உபவாசம் செய்த வர்கள் பயித்தியமாகி விட்டார்கள்.

அவர்கள் அவ்வாறு பயித்தியமானதற்குக் காரணம் அந்த புத்தகம் நாற்பது நாள் உபவாசிக்க வேண்டும் என்று கூறுகிறது.

அவர்களில் சிலர் பொய் பற்களை இணைப்பதற்கான அடித்தகடுகளையும், அவர்கள் பற்கள் விழுந்து போனவர்களா யிருக்கின்றனர்.

அவர்களுடைய கண்கள் உள்ளே சொருகிப் போயிற்று.

தாய்மார்கள் இருக்க வேண்டிய விதமா வது... ஸ்திரீகள் தாய்மார்களாயிருக்க வேண் டும். நீங்கள் புரிந்துள்ளபடி, அவர்களுடைய சிறு பிள்ளைகள், அவர்கள் முற்றிலுமாக நினைவிழந்து விட்டார்கள், மனநிலை பாது காப்பகங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டார் கள். அநேகர், அவர்களில் அநேகர் அப்படிப்பட்ட நிலைக்கு வருகிறார்கள்.


**உபவாசம் இருப்பதை நான் விசுவாசிக் கிறேன். நிச்சயமாக. ஆனால், நீங்கள்**

**உபவாசிக்கும்போது, நீங்கள் பசியாயிருப் பதில்லை. இயேசு, அவர் உபவாசத்தில் இருந்த பிறகு, 'அவர் பசியாயிருந்தார்' என்று வேதம் கூறுகிறது.**

தேவன் நீங்கள் உபவாசிக்க வேண்டும் என்று கூறுகிறார். நீங்களே உங்களை அதில் தள்ளி விடாதீர்கள்.

அவர் உண்மையாகவே ஸ்திரீகளைக் கவர்ந்து விட்டார். அந்த புத்தகத்தை எழுதின மனிதன், அவர் சொல்லும் போது, அங்கே ஒரு ஸ்திரீயின் படத்தைப் போட் டுள்ளார், அவள் இருபது வயதுள்ள இளம் பெண்ணாக காணப்படுகிறாள். அது அவ ளுடைய உபவாசத்திற்குப் பின்னர் என்று கூறப்பட்டுள்ளது. நீங்கள் அவளைப்பார்க்க வேண்டும், அதற்கும் ஏறக்குறைய ஒரு வரு டத்திற்கு பின்பு அவள் எவ்வாறு காணப் பட்டாள், அதற்குப்பிறகு அவள் எவ்வாறு தோற்றமளிக்கிறாள் என்பதாக உள்ளது. பாருங்கள்? நிச்சயமாக.

நீங்கள் அதைச் செய்யக் கூடாது. கிரிியைகளினால் நீங்கள் எதுவும் செய்யக் கூடாது. அது கிருபையினால் உண்டாக வேண்டும். தேவன் அவருடைய இராஜாதிபத்திய கிருபையின்படி...



இரண்டு சிறிய ஸ்திரீகள், கூட்டத்தில் இந்த எட்டு நாட்களுமாகத் தங்களை மறைத்துக் கொண்டு, இந்தக் கூட்டங்களுக்காக, உபவாசித்து ஜெபித்துக் கொண்டிருக்கின்றனர்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

---

# செய்தி: இப்போது நீங்கள் விசுவாசிக்கிறீர்களா?, 54-0307 E, பத்தி எண் E-8

---

*உங்களில் ஒவ்வொருவரும், இந்தக் கூட்டத்தை பொருள் உதவி செய்து தாங்கியுள்ளீர்கள். உங்கள் ஜெபத்தினாலும் தாங்கியுள்ளீர்கள். இன்றிரவில், வழக்கம்போல திட்டமிட்டபடி நடந்தால்...*

**இரண்டு சிறிய ஸ்திரீகள், கூட்டத்தில் இந்த எட்டு நாட்களுமாகத் தங்களை மறைத்துக் கொண்டு, இந்தக் கூட்டங்களுக்காக, உபவாசித்து ஜெபித்துக் கொண்டிருக்கின்றனர்.**

**இந்தக் கூட்டம் வெற்றியுடன் நடை பெற்றதற்கு அதுவும் ஒரு காரணமாகும். அது சரியே.**

ஒருவேளை... இன்றிரவில் அவர்கள் இங் கிருக்கின்றனர் என்று நம்புகிறேன். அது நல்ல அதிகாரப்பூர்வமாக எனக்குக் கூறப்பட் டது, அது உண்மையென்று நான் விசுவா சிக்கிறேன்.

ஆகவே, சகோதரிகளே, உங்களை நான் பாராட்டுகிறேன், அவர்களை மாத்திரம் அல்ல, உபவாசித்தும் ஜெபித்துக் கொண்டு மிருந்த மற்றவர்களையும் கூட நான் பாராட் டுகிறேன், இயேசு கிறிஸ்துவின் பேரில் வைத்துள்ள உங்களுடைய அதிசயமான விசுவாசம் என்னைச் சூழ்ந்து கொண்டது.

உபவாசித்தும் ஜெபித்துக் கொண்டும் இருங்கள், தேவன் நமக்கு ஜெயத்தைத் தருவார்... அவர் நிச்சயமாக அதைச் செய்வார்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 54-0302, யவீரின் மகளுடைய உயிர்த்தெழுதல், பத்தி எண் E-2

*ஒரு சிறிய இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன். நீங்கள் அதை அறிந்திருக்க மாட்டீர்கள், ஆனால் அது உண்மையாக இருக்கிறது.*

**இரண்டு பெண்கள் (கிறிஸ்தவ பெண் கள்) தங்களை (எங்கோ ஓரிடத்தில்) மறைத் துக் கொண்டனர். கூட்டம் முடியும் வரைக் கும் வெளியே தோன்ற மாட்டார்கள்.**

**ஒருபோதும் புசிப்பதில்லை அல்லது எது வும் செய்வதில்லை, இந்த மேடையில் இருக் கிற எனக்காக ஜெபித்துக் கொண்டேயிருக் கின்றனர், இப்போது வரைக்கும் ஏழு**

**நாட்களாக அங்கே இருக்கின்றனர், இந்தக் கூட்டத்திற்காக ஜெபிக்கின்றனர்.**

**அதுதான் காரியத்தை நடப்பிக்கிறது.** *தேவன்... அவர்களுடைய தீரமிக்க ஆத்து மாக்களை ஆசீர்வதிப்பாராக.*

**உபவாசித்தும் ஜெபித்துக் கொண்டும் இருங்கள், தேவன் நமக்கு ஜெயத்தைத் தருவார்... அவர் நிச்சயமாக அதைச் செய் வார்.**

**நாம் அவரிடத்தில் கேட்டு, அவர் அதைச் செய்வார் என்று விசுவாசித்தால், அதைச் செய்வதற்கு அவர் கடமைப்பட்டுள்ளார்.**

---


அதன் காரணமாகவே நீர்
நியாயத்தீர்ப்புக்கு அதைத் தப்ப விடுகிறீர்
என்று நான் விசுவாசிக்கிறேன்
சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

# செய்தி: சாட்சி, மரித்துப் போன சிறுவன் உயிரோடு எழும்புதல், 53-1203, பத்தி எண் E-80

*எப்படியாயினும், தேவனே நான் ஜெபிக் கிறேன், தெய்வீக நியாயத்தீர்ப்பு இந்த இடத்தை தாக்குவதற்கு முன்பாக, ஏதோ சம்பவிக்கப்போகிறது, ஏதாவது செய்யப் படட்டும் என்று நான் ஜெபிக்கிறேன்.*

*இங்கிருக்கிற உம்முடைய அனேக ஊழியக்காரர்களுக்கு நான் சொல்லி வந்துள் ளேன். இங்கே விசுவாசம் நிறைந்த ஜனங் களை நீர் கொண்டிருக்கிறீர், ஜெபிக்கிற, உபவாசிக்கிற, பற்றிக் கொள்கிற உண்மை யான ஜனங்களை உடையவராயிருக்கிறீர்.*

அதன் காரணமாகவே நீர் நியாயத் தீர்ப்புக்கு அதைத் தப்ப விடுகிறீர் என்று நான் விசுவாசிக்கிறேன்.

தேவனே, அவர்கள் உண்மை உள்ள வர்கள்.

ஆனால், இன்றிரவு இங்கிருக்கிற தேவ னற்ற, கிறிஸ்து இல்லாத ஆயிரக்கணக்கான ஜனங்களை சற்றே நினைவுகூருகிறேன். அவர் கள் மீது கிருபையாயிரும்.

தேவனே, ஏதாவதொன்றைச் செய்யும். எழுப்புதலை அனுப்பும்.

ஊழியக்காரரர்கள் உண்மையோடு ஊழி யம் செய்கின்றனர், ஜனங்கள் ஜெபித்துக் கொண்டும், உபவாசித்துக் கொண்டும் இருக் கின்றனர், சிறிய தாய்மார்கள், உணவு புசிக் காமலும், தகப்பன்மார்கள், சிறிய குழந்தை கள் கூட உபவாசம் இருந்து ஜெபிக்கின்றனர்.

*ஓ, மகத்தான தேவனே, நீர்... என்பதை அறிவேன்...* **மனிதர்கள் சுயாதீனம் உடை யவர்கள். அவர்கள் இருதயத்தை உம்மால் தட்ட மாத்திரமே முடியும். அவர்கள் அதை ஏற்றுக் கொள்ள வேண்டும்.**



**சகோ.வில்லியம் பிரன்ஹாம்:**

**இப்போது, இந்த முழு உலகத்திலும் உள்ளதிலேயே வலிமை வாய்ந்த ஆயுதத்தை அவர் நமக்குத் தந்துள்ளார். அது ஜெபம் என்னும் ஆயுதமே.**

***ஜெபம் என்பது, காரியங்களை மாற்றிப் போடுவதாயிருக்கிறது.***


**இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் சர்வ வல்லமையுள்ள தேவனுக்கு முன்பாக தன் கால்களை முடக்கி முழங்காலில் நிற்கும் போது, அது எத்தகைய வல்லமை என்பதைக் கிறிஸ்தவர்கள் உணர்வதில்லை.**

செய்தி: *என் தூதனானவர் உனக்கு முன்பாக போவார்*, 53-0213, பத்தி எண் E-7



# உபவாசம்

# 1



## சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து